விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

நங்கையர் விரும்பும் நவீன
டிசைன் தங்க
நகைகளுக்கு...




74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி


VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 15 சனிக்கிழமை (29.06.2002) தொலைபேசி 3378 ஒலி 192

## கண்காணிப்புக்குழுத் தலைவர் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு

# புலிகளின் கடற் போக்குவரத்தில்

# புதிய இணக்கப்பாடு ஏற்படும்!



## சமாதான முயற்சிகளில் புதிய திருப்பம்

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல்ப்போக்குவரத்து சம்பந்தமாக புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட்பியுறு ஹெவ்டே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

**இப் பேச்சுவார்த்தையின் போது புலிகளின் கடல் போக்கு வரத்துக் குறித்து உடன்பாடு ஒன்றை எட்டும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் குறித்தும் அவற்றை நடைமுறைப் படுத்துவது தொடர் பாகவும் நேற்று சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை வான் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி வந்தடைந்து யுத்தநிறுத்தக் காண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் றொண்ட்பியுறு ஹெவ்டேயும் மற்றும் உறுப்பினர்களும் நேற்றுப் பிற்பகல் 4மணி முதல் 5.30மணி வரை சுமார் ஒன்றரை மணி நேரம் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன் போது விடுதலைப்புலிகளின் கடல்போக்குவரத்து சம்பந்தமாகவும், தீவகத்தில் கடந்த 20ம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகவும், மட்டக்களப்பு, மூதூர் சம்பவங்கள் தொடர் பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சமாக இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் கடல் போக்குவரத்துத் தொடர்பாக உடன்பாடு ஒன்று எட்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் அரசியல்

(08ம் பக்கம் பார்க்க)

## படையினரின். சூட்டுக்கு மிருசுவில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ராசகோன் சிவச்செல்வம் (வயது19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:- நேற்று முன்தினம் மு.ப 10 மணியளவில் மாடு மேய்க்கச் சென்ற இவர் அப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த [illegible] இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அவ் வழியாகச் சென்ற ஒருவர் மேற்படி இளைஞனின் சடலத்தைக் கண்டு கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சாவகச்சேரி பதில் நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலம் [illegible]

## வேலணைத் தாக்குதல் சம்பவம் உயர்மட்ட விசாரணை நேற்று ஆரம்பம்

(திருநெல்வேலி)

வேலணையில் விடுதலைப் புலி உறுப்பினர்களான செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான உயர் மட்ட விசாரணைகள் நேற்று ஆரம் [illegible] பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் கடற்படை உயரதிகாரிகள் நேற்று முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 4மணி வரை சாட்டி சென் அன்ரனீஸ் தேவாலயத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர். [illegible] ளர் செம்மணன், தயாளன் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட தாகக் கருதப்படும் கடற்படையினர் [illegible]

இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ராசகோன் சிவச்செல்வம் (வயது19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:- நேற்று முன்தினம் மு.ப 10 மணியளவில் மாடு மேய்க்கச் சென்ற இவர் அப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பொலிஸார் சடலத்தை மீட்டு மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சாவகச்சேரி பதில் நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-43, 23)

(திருநெல்வேலி)

வேலணையில் விடுதலைப் புலி உறுப்பினர்களான செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான உயர் மட்ட விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின.

கொழும்பிலிருந்து வருகை தந்த பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் கடற்படை உயரதிகாரிகள் நேற்று முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 4மணி வரை சாட்டி சென் அன்ரனீஸ் தேவாலயத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைகளில் விடுதலைப்புலிகளின் தீவுக்பொறுப்பாளர் செம்மணன், தயாளன் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் கடற்படையினர் மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களிடம்

(08ம் பக்கம் பார்க்க)

# தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது வாழைச்சேனையில் குண்டுத்தாக்குதல்

## ஒருவர் பலி ஏழுபேர் படுகாயம்

## பிரதிஅமைச்சரின் வீடு அடித்து நொருக்கப்பட்டது

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் அமைந்துள்ள செம்மண் ஓடைப்பள்ளிவாசலில் நேற்று நண்பகல் தொழுகைக்காக கூடியிருந்த முஸ்லிம் மக்கள் மீது இனந்தெரியாத குழு நடத்திய குண்டுத் தாக்குதலில் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒருவர் வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தை அடுத்து முஸ்லிம் பொது மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முஸ்லிம் தலைவர்கள் தவறிவிட்டார்கள் என்ற ஆத்திர மேலட்டால் ஓட்டமாவடியில் உள்ள பிரதி அமைச்சர் முகைதீன் அப்துல்காதரின் வீட்டின் மீது பொல்லுகள் கொண்டு தாக்குதல் நடத்தி சொத்துக்களை சேதப்படுத்தியதுடன் அவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியுமுள்ளனர்.

இச் சம்பவம் இடம்பெற்ற போது பிரதி அமைச்சர் வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டமையால் எது வித ஆபத்தும் இன்றி தப்பிக் கொண்டார்.

இதேவேளை நேற்று மாலை

(08ம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் வன்முறைச் சம்பவம்

## தமிழ்ச்செல்வன்-ரவூப் ஹக்கீம் தொ. பேசியில் உரையாடினர்

(கிளிநொச்சி)

மூதூர் பகுதியிலும், வாழைச் சேனைப்பகுதியிலும் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தொலைபேசியில் உரையாடியுள்ளார். நேற்று இரவு இடம் பெற்ற அமைச்சர் ரவுபஹக்கீமுடனான இந்த உரையாடலின்போது மூதூர் வாழைச்சேனைப்பகுதியில் இடம்பெற்று வரும் வன்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரை சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டுக்கொண்டார்.

## நெதர்லாந்து தூதுவர் தமிழ்ச்செல்வனை சந்தித்தார்

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் சூசன் பிளேஸ்ஹரியும் பிரதித்தூதுவர் திட்டர் பூப்பறஸ் ஆகிய இருவரும் நேற்று தமிழீழ விடுதலைப்

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

O/L 2002 பரீட்சைமாணவர்களுக்கான மாலைவகுப்புகள் ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், தமிழ், வர்த்தகம், சிறுதொகை தனித்தனி கவனம் சித்திபெறுவது உறுதி வண்ணைசிவன் கோவில் அருகில் 426(302) காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

(5492)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புனித மிக்கேல் சனசமூக முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விழா இன்று சனிக்கிழமை பி.ப2.00மணிக்கு நிலைபமுன்றலில் நடைபெறவுள்ளது.

புனிதமிக்கேல் சனசமூக நிலையமுன்பள்ளியின் தலைவர் நா.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வலிகிழக்குபிரதேசசெயலாளர் செ.குகதாசன் பிரதமவிருந்தினராவும் சிறப்பு விருந்தினராக பி.விக்டர், சு.சிவகுமார், எஸ்.கிருஸ்ணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

# தமிழ்ப் பிரதேசங்களில் கடற்படையின்

# அராஜகச் செயல் மலிந்துள்ளது

## காவலூரில் ரவிராஜ் எம். பி. உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் ஒரு தலைமையின் கீழ் தமது சுதந்திரத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சமாதானத்தை முன்னெடுக்கும் புலிகளின் தலைமையை உலகமே பாராட்டி நிற்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் நேற்று முன்தினம்ஊர்காவற்றுறை பிரதேச சபை திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் தாக்கப்பட்ட கோட்டைக்குள் மக்கள் கிளர்ந்தெழுந்து தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் தேர்தல் பணிக்காக வந்த எம்மை நாரந்தனையில் வைத்து மோசமாகத் தாக்கினர். இன்றும் அதே நிகழ்வு அரங்கேறியிருக்கிறது.

கடற்படையினர் தீவகத்தில் மட்டுமல்ல தமிழர் பிரதேசம் எங்கும் தமது அராஜகச் செயற்பாடுகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

சமாதானத்தில் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக புலிகள்இன்றுபொறுமை காக்கிறார்கள். புலிகளின் சமாதான முன்னெடுப்பைக் குழப்பாது அவர்கள் மீதான தடையை நீக்கி உடன் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (த)

## இலங்கைவங்கி மேற்தரக்கிளை இன்று இயங்காது

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கியின் யாழ் மேற்தரக்கிளையின் வங்கிச் சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதிமுதல் கணனி மயப்படுத்தப்படுவதை முன்னிட்டு சில ஆரம்பவேலைகள் நடைபெறவேண்டியுள்ளதால் இன்று மட்டும் இவ்வங்கி வாடிக்கையாளர் சேவைகளுக்காக முடப்பட்டிருக்கும் என சிரேஷ்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ)

## தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்தவும்

### டக்ளஸ் எம்.பி கோரிக்கை

புலம்பெயர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களை திருப்பி அனுப்புவதில் ஐரோப்பியஒன்றிய நாடுகள் அவசரம்காட்டக்கூடாது என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தூதுவர் உசிற்றாலோவை ஈ.பி.டி.பி செயலாளர்நாயகம் டக்ளஸ்தேவானந்தா கேட்டுள்ளார்

கடந்தமேமாதம் 30ம்திகதி இலங்கை அரசிற்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குமிடையே அடைக்கலம் மறுக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவது தொடர்பான உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இவ்உடன்பாட்டால் ஆபிரக்கணக்கான தமிழ் அகதிகள் விரைவில் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்

இலங்கைஅரசுக்கும் புலிகளுக்குமிடையில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தாகி அமுலில்இருக்கிறது எனினும்அதுஇனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல என்பதால் தமிழ் அகதிகளைத் திருப்பிஅனுப்ப வேண்டாம் என்றும் டக்ளஸ்தேவானந்தா கேட்டுள்ளார். (த9)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை கௌரவ ஆலோசகருமான திரு. ப. கணேசலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் **திரு. சோமசுந்தரம் பரராசசிங்கம அவர்களின்** 31 ஆம் நாளாகிய இன்று அன்னாரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை**
நீர்வேலி.

29. 06. 2002. (C/4541)

## இராசி பலன்

(29- 06- 2002
(ஆனி 15 சனி)
பஞ்சமி முழு நாளும்
அவிட்டம் பி. ப 3. 58 வரை
இராகு காலம் 8. 56- 10.26
நல்ல நேரம் 2. 56- 4. 26

**மேடம்**
அதிகாரிகள் சந்திப்பு, சந்தோசமான நிகழ்வு, உடற் சுகம், தனலாபம்.

**இடபம்**
நண்பர்கள் சந்திப்பு, புதிய பொருள் வருகை, நித்திரைக் குழப்பம்.

**மிதுனம்**
நினைத்தகாரியம்கைகூடும், உணர்ச்சி வசப்படல், உறவினர் சந்திப்பு, உஷ்ணம்.

**கடகம்**
பணவிரயம், ஆலய தரிசனம், திடீர் பயணம், தூரத்துச் செய்தி.

**சிங்கம்**
இனசனக் கொண்டாட்டம், தன்னம்பிக்கைக் குறைவு, அந்நியர் உதவி.

**கன்னி**
தொழில் நன்மை, பணவரவு, பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி

**துலாம்**
தட்டுப்பாடு, சுகக் குறைவு, மனக்கிலேசம், முயற்சி பலிதம்.

**விருச்சிகம்**
புத்திரரால் மகிழ்ச்சி, நல்ல செய்தி, தாய்வழிஉறவு, ரோக பயம்.

**தனுசு**
மனச்சஞ்சலம், அதிகாரம், தொழிற் பிரச்சினை, உடல் உபாதை.

**மகரம**
மதிப்புக் குறைவு, பிரயாணம், முயற்சி தாமதம், தெய்வ சிந்தனை.

**கும்பம்**
கூட்டுமுயற்சி, சுவாரஸ்யம், உடல் வியாதி, பணவரவு.

**மீனம்**
அதிக பிரயாசை, நண்பர்கள் உதவி, புதிய தொழில் முயற்சி, திடீர் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

வளவன்

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீஅம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா இடம் பெறும். (ந-5)

## இன்றும் நாளையும் பகல்நேர மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

அவசரபராமரிப்புவேலைகள் காரணமாக இன்றும்நாளையும் யாழ்குடாநாட்டில்காலை 8 00மணிதொடக்கம் மாலை 5.00மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்றும், **திருகோணமலையில்** நாளை மறுதினத்திலிருந்து புதிய மின்பிறப்பாக்கிகள் மூலம் பரீட்சார்த்த அடிப்படையில் சிலதினங்களுக்கு மின்விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார் (உ—3

## யாழ்ப்பாணம் - மாநகரசபை அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு சொந்தமான கடைகளுக்கான வாடகை

### மீளாய்வு - 2002

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு சொந்தமான கடைகளின் வாடகை மீளாய்வுக் கட்டணம், விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 01.07.2002ந் திகதி முதல் இப்புதிய வாடகைக் கட்டணம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை சகல வாடகைக் குடியிருப்பாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**இ. இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28-06-2002
(கி-4542)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரிஅறிவித்தல்-2002

2002 ஆம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 01. 07. 2002 பிற்பகல் 3. 30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | — | 15% |
| ஏனைய காணிகள் | — | 20% |

நிலுவை உட்பட 2002 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குறித்த நிலுவையை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு X 11, 252 (1) இன்படி நடுகட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் ''மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்'' என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இ. இராமலிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28. 06. 2002

(C/4540)

## திருகோணமலையில் நாளை மாகாண மட்ட விளையாட்டுப்போட்டி

(திருமலை)

வடகிழக்குமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முதல்யூலை மாதம் 13திகதி வரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது

இதேவேளை தேசியஒலிம்பிக்குழுவும் கொக்கோகோலா நிறுவனமும் இணைந்துஇன்று சனிக்கிழமை ஒலிம்பிக்நடை ஒன்றினை ஏற்பாடுசெய்துள்ளனர்

அனுராதபுரம் சந்தியில் இருந்து புறப்படும் ஒலிம்பிக் நடைபவனி கண்டிவீதி உட்துறைமுகவீதிவளியாக திருமலைமுற்றவெளி மைதானத்தைவந்தடையவுள்ளது

இந்த ஒலிம்பிக் நடைபவனியில் சுமார் ஆயிரம் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

### கல்வியியற் கல்லூரி விண்ணப்பங்களில்

## விபரங்களை தெளிவாக குறிப்பிடுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற்கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விபரங்கள் யாவும் கணனி மூலம் பரிசோதிக்கப்படுவதால் விபரங்களைத் தெளிவின்றிக் குறிப்பிடும் விண்ணப்பதாரிகள் அனுமதி பெறும் வாய்ப்பை இழக்க நேரிடுகின்றது.

இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகள் தமது பெயர், சுட்டெண் மற்றும் விடயங்களை தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடுமாறு யாழ். கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இவ்வருடம் தமிழ், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடநெறிகள் புதிதாக ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# சொல்லும், செயலும் ஒன்றிட வாழ்ந்து காட்டிய

# பல்துறைப் புலமைமிக்கவரான பண்டிதமணி

**பரா. றமேஸ்**
புலோலி தெற்கு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின்
*103 ஆவது பிறந்த நாளையொட்டிய கட்டுரை*

'தோற்றிற் புகழொடு
தோன்றுக என்ற சொல்
தூக்கி முன்னே
தோன்றிப் பயில் கொள்
நடை மேல் சுவை கொள்
சுகுண நடை தோன்றி பிடி
நடை என்ன தமிழ்கரு
தன் சொல் எழுத்தில்
தோன்றி சுடர்ந்தோன்
கணபதிப்பிள்ளை என்
தோன்றலன்றோ'

என்று பண்டிதமணி இப்பூமியிலே பிறந்து சுடர்பரப்பிய பாங்கை பாடுகிறார் ஒரு கவிஞர். வள்ளுவன் வாக்குக்கு வரைவிலக்கணம் கொடுத்தாற் போல சின்னத்தம்பியாரும், வள்ளி அம்மையாரும் செய்த தவத்தின் பெறுபேறாய் 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் இருபத்தேழாம் நாள் அவதரித்தவரே சி. கணபதிப்பிள்ளை, தான் பிறந்த சூழலை பற்றித் தானே அழகாக;

'என் தந்தையின் ஊர் மட்டுவில், தாயார் ஊர் தனங்கிளப்பு. அது சிருட்டிக்காலம் தொடக்கம் உலக நாகரிகம் எட்டிப்பாராததொருகிராமம் எனக்குப் பன்னிரண்டாம் வயதில் தாயார் ஊரில்குடியேற நேர்ந்தது. படிப்பென்ற கதைக்கு அங்கே இடமில்லை. காகித விளையாட்டுக்கு மாத்திரம் அங்கே போதிய வசதி இருந்தது. அதில் நான் சேர்ந்து கொண்டேன் என்று கூறுகின்றார்.

உள்ளதைஉள்ளவாறுகூறும் வள்ளண்மை மிக்கவர். பதினெட்டு வயது வரையான காலத்தை காகித, கவறுவிளையாட்டுகளில்கழித்த கணபதிப்பிள்ளை தெய்வத்தமிழ் மொழியையும், சைவசமயத்தையும் பல்லாற்றாலும் ஓம்பி வளர்க்கும் பெரியவரானார். அவரே இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

செயற்றிறம் மிக்கவர்

சொற்பொழிவாளராக தெளிந்த சிந்தனையாளராக, திறமைமிகு பேராசிரியராக, நேர்மையுள்ள ஆராய்ச்சியாளராக, இலக்கிய இரசிகராக, வசனநடை வல்லுனராக, சைவசித்தாந்த அறிஞராக பல்வேறு வகைகளிலும் சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றியவர். பண்டிதமணி வாய்ச்சொல்லில் வீரராக மட்டுமல்லாமல் செயலே செய்து காட்டிய பெருமைக்குரியவர். தாம்பேசியவற்றை, எழுதியவற்றை தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்த மதிப்புக்குரியவர்.

ஒருகாலத்திலேயாழ்ப்பாண மக்கள் அனைவரினதும் நாடி நரம்பிலெல்லாம்ஊறிப்போயிருந்தது சந்த புராணப்படனமே ஆகும். அந்த மரபை எத்துணை ஆர்வத்தோடுநாவலர்பெருமான்பேணினாரோ, அதே போல ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் பேணிசெயற்பட்டவர் பண்டிதமணி. கந்த புராணக் கலாசாரம், கந்த புராண போதனை, கந்த புராண தட்ச காண்ட உரை போன்றன இதற்குச் சான்று பகருகின்றன. வாழ்க்கைமுழுவதும் நைட்டிகப் பிரமச்சாரியாக இருந்து சமய வாழ்க்கை வாழ்ந்து காட்டிய வள்ளல்.

பிழைகளைச் சுட்டிக் காட்டுவார்

'கேட்டார்பிணிக்குந் தகைவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்' என்ற பொய்யா மொழிக்கு வடிவம் கொடுத்தது இவருடைய சொற்பொழிவுகள். கண்டன ஊசியை நசுக்கிடாது ஏற்றிவிடும் தன்மை இவருக்கே உரியது. இந்தியஅறிஞராயினும், ஈழத்து அறிஞராயினும் விடுகின்றபிழைகளை சுட்டிக்காட்டும் நீதிமுறையில்ஒழுகியவர். மெல்லென தொடங்கி ஆற்றொழுக்காய் வியாபித்து நகைச்சுவை, கண்டனம் சிதறும் வகையில் சிந்தனையை தூண்ட வல்லதுபண்டிதமணியின் சொற்பொழிவுகள்.

இன்றைய ஈழத்திலேதலை சிறந்த கல்விமான்கள் பலரை உருவாக்கியபண்டிதமணியின் கற்பித்தல் ஆற்றலும் தனித்துவமானதே, அத்திறத்தை நேரடியாகவே பெற்ற மன்னவன்.

'தயிர்பிசைந்த கையாற்
கலிங்கம் உடுத்தி
உயிரன்பர்க் காதல்
உணர்த்தி- கயல்விழியாள்
வென்ற கலித்தொகையின்
வேகத்தை காட்டியதை
என்றும்நினைவோம்இனிது
என்று சுவையோடு பாடுகிறார்.

தட்சகாண்ட உரை

சிந்தனைச்செம்மல்ராஜாஜி தொடக்கம் நவீன எழுத்தாளர்கள் வரை பலரினதும இலக்கியப் படைப்புகளை ஐயந்திரிபறக் கற்றுத் தனக்கென ஒரு தனிநடையை வகுத்தவர்பண்டிதமணி. பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், புராணங்கள் இதிகாசங்கள் அனைத்தையும்சற்றுப்போர்ந்தவர்பண்டிதமணி அதன் பெறுபேறாகக் கந்த புராண தட்ச காண்டத்திற்கு உரை தந்து ஈழத்திலும், இந்தியாவிலும் எவருமே அசைக்க முடியாத பெருமையை பெற்றவர், சாகித்ய மண்டல உயர் உறுப்பினராகியவர். அதன்மூலம் யாழ் மண்ணிற்கு வளம் சேர்த்தவர் பண்டிதமணி நாவலர், ஆறுமுக நாவலர், இலக்கியவழி, சிந்தனை களஞ்சியம், கம்பராமாயண காட்சி, சமயக் கட்டுரைகள், கோயில், பாரத நவமணிகள், கதிர்காம வேலவன் பவனி வருகிறான், மட்டுவில் கண்ணகை அம்மன் தோத்திரம், சிவராத்திரியில் சிந்திக்கத் தக்கவை, அத்வைத சிந்தனை, அன்பினைந்திணை, செந்தமிழ்க்களஞ்சியம்போன்றவை இவருடைய உரை நடையை நன்கு உணர்த்தும்.

சைவத் தமிழ் ஆசான்

இவ்வாறு தமிழையும், சைவத்தையும் இருகண்களெனப் போற்றிய சி. கணபதிப்பிள்ளை மதுரைத் தமிழ்ச்சங்கப்பரீட்சையிலேபண்டிதராகி தினகரன் பத்திரிகையில் வி.கே.பி. நாதனால்பண்டிதமணியாகி, கலைமகள் ஆசிரியர் வாகீச கலாநிதி சி.வா ஜகந்நாதனால் பண்டித மாமணியாகி, சாகித்ய மண்டல உயர் உறுப்பினராகசைவசித்தாந்த சாகரமாகி, இலக்கிய கலாநிதியாகி, பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இதனாலேயே 'இலக்கிய சிவத்தின் நெற்றிக்கண் பண்டிதமணி' என கனக செந்திநாதன் பாராட்டியுள்ளார்.

'செயற்கரிய செய்வார்பெரியர்' என்பதன்படி மனம், சொல், செயல் ஒருமைப்பட்டவராக, செய்தற்கு அரியதாகிய பலவற்றை செய்ததனால் நம் மண்ணில் மறைந்தும் மறையாத பெரியாரே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்தம்வழியிலே அவருடைய சைவ தமிழ் விழுமியங்களைப் பேணி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக. ■

## உடன் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவிற்காக தெரிவு செய்யப்பட்டு அழைப்பிதழ் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன மாணவர்களை, நிறுவனத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## றுகுணு பல்கலை மாணவன் கைது

(கொழும்பு)

றுகுணு பல்கலைக்கழகத்தை சேர்ந்தமாணவன்ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விஞ்ஞான பீடமாணவர் மன்றத்துக்கு புதிய உறுப்பினர்களை சேர்த்துக் கொளவது தொடர்பாக இடம் பெற்ற மோதலைத் தொடர்ந்தே மேற்படி மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட மாணவன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். (உ-8)

## குடும்பஸ்தர் பிணையில் விடுவிப்பு

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நிபந்தனையோடு கூடிய பிணையில் விடுதலை செய்துள்ளது.

கன்னன்குடா கெட்டியாப்புலவைச் சேர்ந்த இரத்தின சிங்கம் குலசேகரம் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி மட்டக்களப்பு நாசகாரத் தடுப்பு பொலிஸார் இவர் ஓட்டிவந்த உழவு இயந்திரத்தைச் சோதனையிடப்பட்டபோது, விறகுப் பொருட்களுக்குள் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் இரண்டு ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டார். (உ-9)

பிரதமரின் செயலாளர் பிரட்மன் தலைமையில்

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தியை துரிதப்படுத்த விசேட பிரிவு

(கொழும்பு)

வடக்குக்கிழக்கிலுள்ள அனைத்துப்பிரதேசங்களுக்கும் சமமான சேவையினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் விசேட பிரிவுஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, அகதிகள் மீள் குடியேற்றம் மற்றும் இப் பிரதேசங்களின் அபிவிருத்திப்பணிகளை துரிதமாகவும், கிரமமாகவும்செயற்படுத்தவே இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு செயற்பாடுகளுக்கான இவ்விணைப்புப் பிரிவுக்கான ஆணையாளர் நாயகமாக பிரட்மன் வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட-கிழக்கில் செயல்படுத்த வேண்டியதென பல திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன இத்திட்டங்களில் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உட்பட அடிப்படை வசதிகள் இவற்றுள் அடங்கும்.

சுமார் 5ஆயிரம்ஆசிரியர்வெற்றிடங்கள் வடக்கு கிழக்கில் நிலவுவதாகவும் இதில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 60 வீதமான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. பெரும்பாலான பாடசாலைகள் முற்றாக அழிந்த நிலையில் உள்ளன. இவற்றை கருத்திற் கொண்டு அரசாங்கம் இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றுவதற்கென ஒவ்வொரு குடும்பத்துக்கும் 65ஆயிரம் ரூபாவை வழங்கத் தீர்மானித்துள்ளது. (உ-3)

# மலத்தியோன் விசிறுவதால் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த முடியாது

(கொழும்பு)

டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்துள்ளதையடுத்து நுளம்புகளை ஒழிக்க மலத்தியோன் விசிறுவதால் குறிப்பிடத்தக்க பயன்கள் எதுவும் கிட்டாது.

மாறாக நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை ஒழிப்பதே இதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரேவழி என்று சுகாதார அமைச்சின் நோய் பரவுகைத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் ஏ, ரி. குணத்திலக்க தெரிவித்துள்ளார். (உ)

# பெறுமதி கூட்டப்பட்ட வரி அமுலுக்கு வருவது தாமதம்

(கொழும்பு)

வற் (VAT) எனப்படும் பெறுமதி கூட்டப்பட்ட வரி முறை அறிவிக்கப்பட்டவாறு திங்கட்கிழமை முதல் அமுலாக்கப்பட மாட்டாது என நிதியமைச்சர் சொக்ஸி அறிவித்துள்ளார்.

வற்வரிமுறை சம்பந்தமான சட்டமூலத்தை எதிர்த்துஅரசசார்பற்ற நிறுவனம் ஒன்று உயர் நீதிமன்றத்தில்வழக்குத் தாக்கல் செய்துள்ளமையே இதற்கு காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொருள்கள் சேவைகள் வரியும், (ஜி. எஸ். ரி) தேசிய பாதுகாப்பு வரியும் (என். எஸ். ரி.) மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்குமெனவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி அரசசார்பற்ற நிறுவனம்உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பிற்கமையவே இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வரி விதிப்பு முறை அமுல் செய்யப்படும்.

இவ்வரி, மக்களுக்கு சுமை ஏற்படுத்தாத வகையில் மறுசீரமைக்கப்படவேண்டும் என வர்த்தக சமூகம் வலியுறுத்தியுள்ளதுடன், அத்தியாவசிய பொருட்கள் மீதுஇந்தவரியை விதிக்கும் போது வாழ்க்கைச் செலவு உயர்வதுடன், கைத்தொழிலுக்கான மூலப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிவிடயத்தில் அமைச்சர்கள் மத்தியில் முரண்பாடுகள் எதுவும் இல்லை என்று பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஈழ அகதிகளை வலுக்கட்டாயமாக அழைத்துவரும் எண்ணமில்லை

## இந்தியாவில் அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைஅகதிகளைவலுக்கட்டாயமாகநாட்டிற்குஅழைத்து வரும் எண்ணம் இல்லையென புனர்வாழ்வு மீள் குடியேற்ற அகதிகள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தின் போது சென்னையை அடுத்துள்ள ஈழ அகதிகள் முகாம் ஒன்றைப் பார்வையிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடுதிரும்பும் அகதிகளுக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் என்றும் இலங்கையர் யுத்தகாலத்தில் பல நெருக்கடிகள் மத்தியிலேயே குடும்பங்களைபிரிந்து அகதிகளாக தமிழ்நாட்டிற்குச் சென்றனர் என்றும் அவர்அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சி

(கொழும்பு)

நாட்டின் 14 சிறைச்சாலைகளிலும் கடமையாற்றி வரும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் போதைப்பொருள்களுக்கு அடிமையான கைதிகளுக்கு புனர் வாழ்வு அளிக்கும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டகைதிகளின் மறுவாழ்வு நலன்கள் குறித்தே வெளிநாட்டு பயிற்சிகள வழங்கப்படவுள்ளதாகவும்,

தற்போது சிறைச்சாலைகளிலுள்ள அதிகாரிகளுக்கும் கைதிகளின் நலன்கள் குறித்த பயிற்சிகள் இல்லாது இருப்பது ஒருகுறைபாடாகவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனை நீக்குவதற்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

புனர் வாழ்வு அளிக்கும் கருத்தரங்கில் கலந்து கொண்ட கைதிகள், புனர் வாழ்வுக்குரிய உளவியல் உதவிகளை பெற்றுத்தருமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# கஞ்சாவுடன் சிக்கியவருக்கு 10 ஆயிரம் அபராதம்

(ஊர்காவற்றுறை)

கஞ்சாவைத்திருந்தநபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் ஊர்காவற்றுறை நீதி மன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு துறைமுகப் பகுதியில் 110 கிராம் கஞ்சாவுடன் அண்மையில் கைது செய்த நபரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

மேற்படி நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஊர்காவற்றுறைநீதி மன்ற பதில் நீதிபதி பா.பாலசுப்பிரமணியம் 10 ஆயிரம் ரூபா அபராதமும் இருபாலையில் உள்ள கானான் சிறுவர் இல்லத்திற்கு 2 ஆயிரம் ரூபா தர்மப் பணம்செலுத்துமாறும் உத்தர விட்டதுடன், கைப்பற்றப் பட்ட கஞ்சாவினை அழிக்குமாறு பொலிஸாருக்கும் உத்தரவுபிறப்பித்தார். (உ-75)

## கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள்

# பக்கச் சார்பற்ற விசாரணைக்கு அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

மூதூர் மற்றும் வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை இலங்கை முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வன்மையாக கண்டித்துள்ளார்.

வாழைச் சேனை மற்றும் மூதூர் சம்பவங்களையிட்டு பக்க சார்பற்ற உயர்மட்ட விசாரணை நடாத்தப்பட்டு குற்றமிழைத்தோர் எத்தரப்பினராயினும் தண்டனை வழங்கப்பட்டு நீதியும் நியாயமும் நிலை நாட்டப்பட வேண்டுமெனவும் அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சமாதானச் சூழ்நிலை நிலவும் வேளையில் அதனை சீர்குலைக்கும் வகையில் ஆத்திர மூட்டும் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாதிருக்கும் படியும் நிதானமாக நடந்து கொள்ளுமாறும் சகல மத,இன மக்களிடத்திலும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

# பெண்களும் போரும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா தலைமையில் 'பெண்களும் போரும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கிற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்து 8 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## தேர்தல் இடாப்பு மீளாய்வு

# பிழையானதகவல்வழங்கின் சிறைத் தண்டனை

(கொழும்பு)

இறந்தவர்களின் பெயர்களை தேர்தல் இடாப்புகளில் இருந்து நீக்குவதுடன், 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களை புதிதாக சேர்த்துக் கொள்ளும் வகையில் இவ்வாண்டிற்கான தேர்தல் இடாப்புகளை மீளாய்வு செய்யும் பணி இடம்பெறுகிறது.

எனவே இது தொடர்பான தகவல்களை வழங்கத் தவறும் பட்சத்தில் பிரதான குடியிருப்பாளர் நீதிமன்றத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு 500 ரூபா தண்டப்பணம் அறவிடப்படுவதுடன் ஒரு மாதகால சிறைத்தண்டனைக்கும் உட்படுத்தப்படுவார் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இவ்வாண்டிற்கான தேர்தல் இடாப்புகளை மீளாய்வு செய்யும் பணிகள் தற்போது நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

# பரு. மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம்

(மத்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் பாடசாலை மாணவர்களுக்கான நடமாடும் பற்சிகிச்சை முகாம்நடாத்தப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும் உள்ள பாடசாலைகளில் இம்முகாம் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை துன்னாலை, நெல்லியடி பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள 13 பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு கரவெட்டிமாணிக்கவாசகர்வித்தியாலயத்தில் பற்சிக்சை முகாம் நடாத்தப்படவுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் இளங்கோ தெரிவித்தார். (உ-23)

# படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து இன்று மு.ப. 10.00 மணிக்கு 'SHAKESPEARE IN LOVE' எனும் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

---

## வரலாற்று

இவரைப் பின்பற்றி ஏனையோரும் பல்வேறு இடங்களிலே தங்கியிருந்து அவ்வப் பிரதேசங்களில் நிலவும் பண்பாட்டு முறைகளையும் வரலாற்று ஆதாரங்களையும் வெளிக்கொணரும் வகையில் நூல்களை யாத்து உதவுவதே சமூகத்துக்குச் செய்யும் சேவையாகும். ●

# பறக்கும் தட்டுகள் நெருங்கும் சமயம் மின்தடங்கல் ஏற்படுகிறதாம்

## பொலநறுவை மக்கள் புகார்

(கொழும்பு)

இலங்கை வான்பரப்பில் ஒருமாத காலமாக பறந்து திரியும் மர்மப் பொருட்கள் மற்றும் பறக்கும் தட்டு நிலப்பரப்பிற்கு சமீபமாக வரும்போது அப்பிரதேசங்களில் மின்சாரம் சொற்ப நேரத்திற்கு தடைப்படுவதாக பொலநறுவைப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மின்சார சபையிடம் முறையிட்ட போது மின்சார சபையினர் இதற்கான காரணம் யாதென அறியமுடியவில்லை என்றும் தமது மின் உபகரணங்களிலோ, மின் விநியோகத்திலோ எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து மர்மப் பொருட்களின் சக்திமிக்க கதிர்வீச்சினால் மின்தடை ஏற்படுமா என்ற சந்தேகமும் விஞ்ஞானிகள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தக்கோணத்தில் தற்போது விஞ்ஞானிகள் ஆய்வை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

# அடிப்படை வசதிகள்இல்லை மீளக்குடியமரல் தாமதம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 2ஆயிரத்து 300 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

கட்டைக் காடு முதல் மாமுனைவரையான மேற்படி பிரதேசத்தில் இடம் பெயர்வுக்கு முன்னர் சுமார் 5 ஆயிரம்வரையான குடும்பங்கள் வசித்து வந்தன.

தற்போது இப் பகுதியில் அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படாத காரணத்தினால் எஞ்சிய குடும்பங்கள் மீளக்குடியமர்வதில் ஆர்வம் குன்றிக் காணப்படுகின்றன. (உ-42)

# கைதிகள்விடுதலைஇன்னும் நடைமுறையில் இல்லை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் 5 (2) ஆம் பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

அரசாங்கமும் சட்டமா அதிபர் திணைக்களமும் இது குறித்து பல தடவைகள் அறிவித்திருந்த போதிலும், செயற்பாடு மந்த கதியிலேயே உள்ளதாக பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதையடுத்து சிறு குற்றச்சாட்டுகள் மற்றும் சாட்சிகள் இல்லாத அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் 5 (2) சட்டப்பிரிவின் கீழான கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்று கூறப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இந்த 2 ஆம் பிரிவும் பல்வேறு விதமாகப் பிரிக்கப்பட்டுவகைப்படுத்தப்பட்டே சிலர் விடுவிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## பண்டிதமணியின்

# பிறந்த தின நிகழ்வும் நூல் அறிமுக விழாவும்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 103வது பிறந்த தின நிகழ்வும்,கம்பராமாயணக் காட்சிகள்-2 அறிமுகவிழாவும் நாளை மு,ப.9.30மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பண்டிதை பொ.பாக்கியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை அருட்கவி சீ.விநாசித்தம்பியும் தொடக்கவுரை யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதிபேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர்.

கம்பராமாயணக் காட்சிகள் நூல் அறிமுகவுரையைமயிலங்கூடலூர் பி.நடராஜனும், விமர்சன உரையை கவிஞர் இ.முருகையனும் நிகழ்த்தவுள்ளனர்.

பண்டிதமணி நினைவுச் சொற்பொழிவை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் செ.திருநாவுக்கரசு ஆற்றவுள்ளார். (உ)

# விசேட அதிரடிப்படை வெளியேறியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகள் மற்றும் ஒரு வணக்கஸ்தலம் ஆகியவற்றிலிருந்த விசேட அதிரடிப்படை பொலிஸார் வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

மேற்படி இடங்களிலிருந்து விசேட அதிரடிப்படைப் பொலிஸார் வெளியேறியதை அடுத்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர், யூனிசெவ் பிரதிநிதி மொனிக்கா மாட்டின், கண்காணிப்புக்குழுவின் புலிகள் தரப்புப் பிரதிநிதி எஸ்.சின்னையா ஆகியோர் சென்று அந்த இடங்களைப் பார்வையிட்டனர். (த)

## பல்கலையில் நாளை

# மகாபொல சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசாரஅமைச்சர் ரி.மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ பாலசுந்தரம் பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில்சகலபீடங்களையும் சேர்ந்த 375 மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (உ)

# இன்று ஒரு தகவல்

## சீனக்குடியரசுநிறுவப்படல்

கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் சீனாவில் ஆண்டு வந்த மஞ்சு மரபினரின் பல மின்மையைப் பயன்படுத்திக் கொண்டு ஐரோப்பியர்கள் வாணிபத்திற்காகச் சீனாவின் பல கடற்கரைப் பட்டினங்கலைப் பெற்றனர். இந் நகரங்களில் மேனாட்டவர்கள் தமது சொந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வாழ்ந்து வந்தனர். அயலாரின் ஆதிக்கத்தைக் கண்டு மனங்கொதித்த சீன மக்கள் 1899 ஆம் ஆண்டில் ஆர்த்தெழுந்தனர். இதுவே 'குத்துப் போர்வீரர் கலகம்' எனப்படுகிறது. புதியமுறைப் போர்க்கருவிகளைப் பெற்ற ஐரோப்பியர் அவ்வெழுச்சியை எளிதில் அடக்கினர். இதற்குப்பின் சீனாவில் சில ஆண்டுகள் அமைதி நிலவியது.

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நிகழ்ந்த போரில் ஜப்பான் அடைந்தவெற்றி சீனாவின் எழுச்சிக்கு அடிகோலியது. 1911 ஆம் ஆண்டு சன்-யாட்-சென் தலைமையில் சீனாவில் பெரும் புரட்சி தோன்றியது. தேசியம், குடியாட்சி, சமதர்மம் என்னும் மூன்று கருத்துக்கள் அப் பெரியாரால் வலியுறுத்தப்பட்டன. தேசிய விழிப்புணர்வு பெற்ற சீன மக்கள் மஞ்சு மன்னர்களின் ஆட்சியை ஒழித்தனர். 1912 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாள் சீனாவில் குடியரசு நிறுவப்பட்டது. சன்-யாட்-சென் இதன் தலைவரானார். 1912 முதல் 1925 வரை அவர் ஓயாது உழைத்துத் தெற்கில் காண்டனைத் தலைநகராகக் கொண்ட சீனக்குடியரசைப் பலப்படுத்தினார். கோமின்டாங் எனும் மக்களின் தேசியக் கட்சியை ஸ்தாபித்தார். 1917 இல் தோன்றிய ரஷ்யப் புரட்சிக்குப் பின் கோமின்டாங் கட்சியில் பொதுவுடைமைக் கருத்துக்கள் சில புகுந்தன. பொதுவுடைமைக் கருத்துக்களை வெறுத்தவர்கள் சியாங்கே ஷேக்கைத் தலைவராகக் கொண்டனர். இவரது கட்சி தேசியக்கட்சி எனப்பட்டது. இங்ஙனம் கோமின்டாங் கட்சியில் இரு பிளவுகள் ஏற்பட்டன. சியாங்கே ஷேக் செல்வந்தரின் துணைகொண்டு 1927 இல் நான்கிங் நகரில் ஓ அரசாங்கத்தை நிறுவினார். சீனா நான்கு பிரிவுகளாகப் பிரிந்தது. காண்டனைத் தலை நகராகக் கொண்ட தெற்குச் சீனா பழைய கோமின்டாங் கட்சியாலும், வட சீனா இராணுவ பிரபுக்களாலும், இவற்றிற்கிடையே இருந்த நான்கிங் பகுதி சியாங்கே ஷேக் அரசாங்கத்தாலும் ஆளப்பட்டன. ஆங்காங்கே சிறிய பகுதிகளில் சீனப் பொது உடைமைக் கட்சியினர் பலம் பெற்றிருந்தனர்.

கோமின்டாங் கட்சியில் பொதுவுடைமைக் கருத்துக்களைக் கொண்டவர்களுக்கும் , சியாங்கே ஷேக் கட்சியினருக்கும் உள்நாட்டுப் போர்தோன்றியது. 1937இல் ஜப்பான் சீனாவைத் தாக்கியதால் உள்நாட்டுப் போர் நின்றது. சீன மக்கள் தம் கருத்து வேற்றுமைகளை மறந்து பகைவரை விரட்டத் தீவிரமாகப் போராடினர். இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியுற்றதால் சீனா காப்பாற்றப்பட்டது. போருக்குப் பின் மீண்டும் சீனாவில் உள்நாட்டுப் போர் தோன்றியது. 1949 ஆம் ஆண்டிற்குள் சீனா முழுதும் பொது உடைமைக் கட்சியினர் வசமாயிற்று. பீகிங் நகரில் 'சீன மக்களின் குடியரசு' எனும் பெயரால் பொதுவுடைமை அரசாங்கம் நிறுவப்பட்டது. மாசேதுங் அதன் ஜனாதிபதியானார். சூ-என்-லாய் அதன் பிரதம மந்திரியானார். சியாங்கே ஷேக் பார்மோஸா தீவிற்குத் தப்பியோடி அங்கே அமெரிக்காவின் பாதுகாப்பின் கீழ் தமது தேசியக் கட்சியின் அரசாங்கத்தை நடத்தினார். ●

நன்றி
சமூக அறிவுநூல்-10

# மூதூர் சென்ற உயர்மட்டக் குழுவால் சமாதானத்தை வலியுறுத்தி கூட்டம்

(மூதூர்)
மூதூர் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து, அங்குள்ள நிலமைகளை நேரில் சென்று ஆராய்வதற்கு அரசாங்கத்தின் உயர் மட்டக் குழு ஒன்று நேற்று முன்தினம் மூதூர் பகுதிக்கு சென்றது.

இந்த உயர் மட்டக்குழுவில் அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, கரு ஜெயசூரிய, ரவூப் ஹக்கீம் மற்றும் ஆர் .சம்பந்தன் எம். பி, மட்டு திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை,மவ்னூப், தௌபீக், ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் அங்கு நடத்திய சமாதானக் கூட்டத்தில், மோதலில்ஈடுபட்ட இருகுழுக்களும் எதிர் காலத்தில் இத்தகைய சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என்றும், இரு சமூகங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

இது இவ்வாறு இருக்க, எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கருஜெயசூரியா மூதூரில் பல இடங்களிலும் மின்சார நிலையங்களை திறந்து வைத்துள்ளார். (வ)

## போயா தினங்களிலும் இறைச்சிக் கடைகள் இயங்குகின்றனவாம்

(சுதுமலை)
போயா தினங்களிலும் இறைச்சிக்கடைகள்சில இயங்குவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

போயா, விடுமுறை தினமாகையால், அன்றையதினம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களோ, உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களோவிலங்கறுமனைக்குச்சென்றுஇறைச்சிப் பரிசோதனை செய்வதில்லை.

இதனால், பரிசோதனைக் குட்படுத்தப்படாதநோயுள்ள மாடுகளே இவ்வாறான தினங்களில் வெட்டப்பட்டு இறைச்சியாக விற்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த போயாதினத்தில்அச்சுவேலி, உடுவில், மானிப்பாய் பகுதி இறைச்சிக்கடைகளில் விற்பனை இடம்பெற்றமைகுறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-252)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)
உடுவில் வடக்கு விவசாயிகள்சம்மேளனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர் வே. இளங்குமரன் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக செ. சண்முகநாதன், செயலாளராக க. கணேசரத்தினம், பொருளாளராக இ. மாணிக்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-19)

## ஜனாதிபதியின் பிறந்தநாள்

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்காவின் 57 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி நாட்டின் பல பாகங்களிலுமுள்ள ஆலயங்களில் மதவழிபாடுகள் இடம்பெறவுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார். (உ-8)

## அரச-அரசசார்பற்ற நிறுவனப் 'பணியாளர்கள் விபரங்கள் திரட்டல்

(சுதுமலை)
அரச-அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் அமைச்சுகள் திணைக்களங்கள்கூட்டுத் தாபனங்களில் கடமையாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக அமைய ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரியும் ஊழியர்களது தகவல்களைத் திரட்டி அனுப்பும்படி சகல நிறுவனங்களிற்கும் சுற்றுநிருபம் மூலம் பொது நிர்வாக அமைச்சின் முகாமைத்துவ சீர்திருத்த அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

உரியதகவல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரால் பூரணப்படுத்தப்பட வேண்டும் எனவும் நிறுவனத்தலைவர்கள் அதை உறுதிப் படுத்தி விரைவாக அனுப்பிவைக்கும் படியும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபரங்கள் எதிர் வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் திரட்டப்பட வேண்டும் எனவும் எதிர் வரும் யூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக அவ் வவ் நிறுவனத் தலைவர்கள் தமது நிறுவனத்தில்கடமையாற்றும் ஊழியர்களது விபரங்களைத் தொகுத்து தொகை மதிப்பீட்டு புள்ளி விபரக் கிளைக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2 2 5)

## இந்திய பிரபல நிறுவனம் 12.5 மில்லியன் ரூபாவை இலங்கையில் முதலீடு

(கொழும்பு)
இந்தியாவின் பிரபல'என லொக் அன்ட் டிஜிடல் சிஷ்டம்ஸ் எக்ஸ்போட்' நிறுவனத்தின் பிரதிநிதி ப்ரிஜொஸ் பட்டோல் இலங்கை வந்துள்ளார் தமது ஏ.டி.எஸ்.நிறுவன தொலைபேசிவலையமைப்புக்காக இலங்கையில்12.5 மில்லியன் ரூபாவினை முதல் கட்டமாக முதலீடு செய்யும் பொருட்டே இவர் இலங்கை வந்துள்ளார்.

புத்துயிரளிக்கப்பட்டுள்ள இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் முதல் தடவையாக இங்குமுதலீடு செய்யும் பிரபல இந்திய நிறுவனம் இதுவென்பதுகுறிப்பிடத்தக்கது. (உ)

## பரந்தன் பிரதம தபாலகம் இயங்குகிறது

(கிளிநொச்சி)
'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து தர்மபுரத்தில் இயங்கிவந்த பரந்தன் பிரதம தபாலகம் மீண்டும் அண்மையில்பரந்தனில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தபால் அதிபர் எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் இ. ஐயாத்துரை கலந்துகொண்டு தபாலகத்தை திறந்துவைத்தார். (உ-3)

## முக்கோணகிரிக்கெட் போட்டி இங்கிலாந்து அணியிடம் இலங்கை தோல்வி

(கொழும்பு)
முக்கோண சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் ஆரம்பப் போட்டி இலங்கை-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில்பிறன்பிறிச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்றபோது, இங்கிலாந்து அணி 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி,50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களை பெற்றது.

இதில் அன்ரூபிலிம்றோ ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் அலெக்ஸ்ரீவோர்ட் 83 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது.

இதில்றமேஷ்களுவித்தாரன் 52 ஓட்டங்களையும் மாவன் அத்தப்பத்து 47 ஓட்டங்களையும் பெற்றனர். (உ-9)

## காவலூர் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கொடுப்பனவு வழங்குவதில் சிரமம்

(ஊர்காவற்றுறை)
ஊர்காவற்றுறையில் இயங்கும்31முன்பள்ளிகளில்10முன்பள்ளி ஆசிரியர்களுக்கே ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் கொடுப்பனவு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை வழங்க மேற்படி முன்பள்ளிகளை இயக்கும் பொது அமைப்புகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிய வருகிறது. (உ-75)

## கல்குடாவில் நேற்று முழுநாள் ஊரடங்கு

(சொழும்பு)
கலவரங்களையடுத்து நேற்று முழு நாளும் கல்குடாவிலும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் தொடர்பு கொண்டு, நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கோரியதைத் தொடர்ந்தே இவ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தவிர, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஒன்று கூடல்களை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகப்பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்துகல்குடாஉட்பட்ட ஏனைய பிரதேசங்களில் பெருமளவு பொலிசாரும்,இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (உ-8)

### கும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-75,18)

## முகமாலையில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிக்கு மின் இணைப்பு

(மந்திகை)
முகமாலையில் அமைந்துள்ள இராணுவ சோதனை சாவடிக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படவிருப்பதாக மின்சார சபைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முகமாலையில் சோதனைச் சாவடியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகளில் பொருட்கள் ஏற்றி இறக்கி சோதனை செய்யப்படும் இடங்களுக்கே மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக கொழும்பிலிருந்து தரைவழி ஊடாக மூன்று ஜெனரேற்றர்கள் எடுத்து வரப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. (உ-23)

# போஷாக்கின்மையால் துன்புறுவோர்க்கு புத்துயிரூட்டும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(வவுனியா)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கடந்த காலங்களில் அரசு விதித்த பொருளாதாரத் தடையினால், போஷாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டு உயிராபத்தை எதிர்கொண்ட 966 பேருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புத்துயிரூட்டியுள்ளது

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாய்–சேய்போஷாக்கு நிலையங்கள் மூலம்பராமரித்த ஆயிரத்து 298 தாய்மார் மற்றும் சிறார்களில் 966 பேர் தற்போது பயன் பெற்றுவெளியேறியுள்ளனர்.

அக்கராயன்குளம் தாய் சேய் போஷாக்கு நிலையத்தில் 201 பேரும் மல்லாவி நிலையத்தில் 108 பேரும், புதுக்குடியிருப்பு நிலையத்தில் 309 பேரும், இலுப்பைக் கடவை நிலையத்தில் 67 பேரும், தர்மபுரம் நிலையத் 146 பேரும், முழங்காவில் தாய்சேய் போஷாக்கு நிலையத்தில் 135 பேரும் இவ்வாறு பயன்பெற்று வெளியேறியுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் போஷாக்கு நிலையங்களில் பராமரிக்கப்படுபவர்களுக்கு 6 நேர போஷாக்கு உணவு வழங்குவதுடன் மருந்து மாத்திரைகள் என்பன வழங்கி எதிர்பார்க்கப்படும்நிறை மற்றும் ஆட்கள் தேறும்வரை பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

பராமரிக்கப்படும் பாலூட்டும் தாய்மார், கர்ப்பவதிகளுக்கு அடிப்படைசுகாதாரக் கல்வி, போஷாக்கு மற்றும் வருமான அதிகரிப்பு தொடர்பான அறிவூட்டல் என்பனவும்,

பயனடைந்து வெளியேறுபவர்களுக்கு வருமானத்தை அதிகரிப்பதற்கான கால்நடை வளர்ப்பு, தையல் மற்றும் தொழில்சார் பயிற்சி என்பனவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் அனாவாசியமான உயிரிழப்புகள் பலவும் தவிர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ.)

## பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து மாகாணமட்ட தடகளப் போட்டிகளில் பங்கு பற்றுபவர்களுக்கான பயிற்சிகள் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்கான பயிற்சிகள் காலை 7 மணி முதல் 9 மணி வரை நடைபெற்று வருகின்றது.

(உ-19)

# ஐ. தே. மு. அரசுக்கு எதிராக நடவடிக்கை பொ.ஐ.முன்னணி தீவிர ஆலோசனை

(கொழும்பு)

ஐ.தே.மு.யின் அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க ஆகியோர்க்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதென முன்னர் தீர்மானித்திருந்தபொ.ஐ.மு.தற்போது ஐ.தே,மு அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி தீவிரமாகஆலோசனை செய்து வருகின்றது.

இதனையேதமதுகட்சியைச் சேர்ந்த பலர் விரும்புவதாக பொ.ஐ.மு சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரச உயர்பீடம் பாரதூரமான தவறுகளை செய்துள்ளது.வடகிழக்கு மக்கள், வாழ்க்கைச்செலவின அதிகரிப்பாலும் தம் பிரதேசங்களுக்குரிய ஏனையபிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கத்திற்கு செலுத்தும் வரிமூலமும்,விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வரி செலுத்தும்படிநிர்ப்பந்திக்கும் செயல் மூலமும் பெருமளவு பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்கிறார்கள்.

இந்நிலைமைக்கு மாற்றுநடவடிக்கை ஏதாவது அரசாங்கம் வைத்துள்ளதா?எனவே தான் மேற்கூறிய இரு அமைச்சர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக எமது கட்சி அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு தீர்மானித்தது.

கடந்த ஜூன் 17இல் பொ.ஐ.மு கூட்டத்தில் பொ.ஐ.மு ஆதரவாளர் துன்புறுத்தப்படுவதற்காக ஜோன் அமரதுங்கவிற்கும் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்த தவறியமைக்காக ரவிகருணாநாயக்கவிற்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது பற்றி தீர்மானிக்கப்பட்டது,

இவர்கள் தொடர்பாக பல தகவல்கள் திரட்டி வருகிறோம்.ரவிகருணாநாயக்க பொ.ஐ.மு.ஆதரவாளர்களை தூண்டுவதற்கு'கறுப்புப்பூனைகள்' குழுவை அமைத்துள்ளார்.

இவ்வாறு தெரிவித்த அவர் ஜூலை 7இல் இடம் பெறும் பொ.ஐ.மு பாராளுமன்றகுழு கூட்டத்தில் இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதா? அல்லது முழு ஐ.தே.முவிற்கு எதிராகவும் நடவடிக்கைஎடுப்பதா என்பது குறித்து ஆராயும் என்றும் தெரிவித்துள்ளார். (உ)

# ஆஸி. தடுப்பு முகாமில் உதடுகளை ஊசிநூலால்தைத்து உண்ணாவிரதம்

(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் சர்ச்சைக்குரிய வுமாரா தடுப்பு முகாமில் இருக்கும் அகதிகளில் 125 க்கும் அதிகமானோர் உதடுகளை ஊசி நூலால் தைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த புதனகிழமை முதல் ஆரம்பித்துள்ளனர்.

வூமாரா அகதி முகாமில் சட்டவிரோதக்காரர்கள் 200 பேர் வரை தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 13 பேர் சிறுவர்களாவர்.

தம்மை உடனடியாக விடுவிக்கக் கோரி மேற்படி உண்ணாவிரதம் இருப்போரை உன்னிப்பாகக் கண்காணிக்குமாறு வைத்திய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆறு மாத காலத்தில் அகதிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய போராட்டம் இதுவாகும். (உ-3)

# சீனப் பிரதம நீதியரசருக்கு 79 வயதில் திருமணம்

சீனாவின் பிரதம நீதியரசர் சேர். டிமோஸி டுயிவாகா (வயது 79) அடுத்தமாதமளவில் பெண்சட்டத்தரணி (வயது 27) ஒருவரை திருமணம் செய்யவுள்ளார்.

இவர் தனது நீதியரசர் பதவியிலிருந்து இளைப்பாறுவதற்கு 11 தினங்கள் முன்னர் இத்திருமணம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ரஷ்யாவில் வெள்ளப் பெருக்கு 80 பேர் உயிரிழப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவில்சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பலியானவர்களின் எண்ணிக்கை 80 அக அதிகரித்துள்ளது.

ரஷ்யாவின் தென்பகுதியில் ஏற்பட்ட இந்த வெள்ளப் பெருக்கினால்ஆயிரக்கணக்கானோர் வீடுவாசல்களை இழந்துள்ளதுடன்பெருமளவுபயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒருதசாப்தகாலத்தில்ரஷ்யாவில் ஏற்பட்ட மோசமான வெள்ளப்பெருக்குஇதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-9)

# பலஸ்தீன ஜனாதிபதி தேர்தலை ஜனவரியில் நடத்த தீர்மானம்

## வெற்றி தனக்கே என அரபாத் வீரமுழக்கம்

(காபூல்)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாகப் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ், மத்திய கிழக்கிற்கான கொள்கை உரையில், பயங்கரவாதத்திற்கு அடிபணியாத புதிய தலைவரைப் பலஸ்தீனம் தெரிவுசெய்ய வேண்டுமென்ற கோரிக்கைக்கு சவால் விடுக்கும் வகையிலேயே அரபாத் இவ்வாறு அறிவித்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பலஸ்தீனத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பீடுகளின் படி, தானே மீண்டும் வெற்றிபெற வாய்ப்பு இருப்பதாகவும், புதிய தேர்தலை ஜனவரி மாதத்தில் நடத்தவுள்ளதாகவும் அரபாத் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-9)

# சட்டவிரோத குடியேற்ற வாசிகள் தப்பியோட்டம்

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடுகடத்தப்படவிருந்த 30க்கும் மேற்பட்ட சட்டவிரோத குடியேற்ற வாசிகள் உள்மேரா தடுப்பு முகாமிலிருந்து நேற்று முன்தினம் தப்பிச் சென்றுள்ளனர்.

இம்முகாமிலுள்ளோர் தங்களை நாடுகடத்த வேண்டாமெனக் கோரி நேற்று ஐந்தாவது நாளாகவும் தங்களது வாய்களை ஊசியால் தைத்து போராட்டம் நடத்திவந்தமை தெரிந்ததே. (உ-8)

# வறிய நாடுகளை வளம்படுத்த 100கோடி டொலர் உதவி

## ஜி-7நாடுகள் இணக்கம்

(இலண்டன்)

உலகின் வறிய நாடுகளுக்கு கடனடிப்படையில் நிதியை வழங்குவவதற்கு 7 கைத்தொழில்மய நாடுகள் 100 கோடி டொலர்களை வழங்க முன்வந்துள்ளன.

உலக நாடுகளிடையே போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் கடன்வழங்கும் முயற்சிகள் தடைப்பட்டிருந்தன இருந்த போதிலும் ஜி-7 உச்சிமாநாட்டில் இப்பிரச்சினைக்குதீர்வு காணப்பட்டது.

கனடாவில் நடைபெறும் இவ் உச்சிமாநாட்டில் முன்னாள் சோவியத் யூனியனின் அழிவுதரும் ஆயுதங்களையும் திட்டங்களுக்கு 2ஆயிரம் கோடி டொலர்களைபெற்றுக் கொடுப்பதற்கும் இந்நாடுகள் முன் வந்துள்ளன.

அடுத்த தசாப்தத்தில் கடன் வழங்கும் திட்டத்திற்கமைய அமெரிக்கா ஆயிரம் கோடி டொலர்களை வழங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# மதம் கொண்ட யானை 9 பேரை பதம் பார்த்தது

(கொல்கொத்தா)

மதம்பிடித்த யானை 9 பேரை அடித்தும் மிதித்தும் கொன்றுள்ளது.

இந்தியாவின் கிழக்குமாநிலமான மேற்கு வங்காளத்தில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேபாளஎல்லையில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரதேசமொன்றில் உணவுக்காக அலைந்த யானையொன்றுக்கு திடீரென மதம் பிடித்ததாகவும்,

வழியில் அகப்பட்டவர்களை ஒருவர் பின் ஒருவராக அடித்தும் மிதித்தும் கொன்றதாகவும் தெரியவருகிறது.

வான் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும், பரா இராணுவ வீரர் ஒருவரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். (உ)

# பயங்கரவாதப் பட்டியலில் மேலும் இரு இயக்கங்களை அமெரிக்கா இணைப்பு

(வாஷிங்டன்)

உலகில் உள்ள பயங்கரவாத இயக்கங்கள் இரண்டின் பெயர்களை பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது.

'சிக்' பிரிவினை வாதஇயக்கங்கள் இரண்டே புதிதாக பட்டியலில் இடம் பெறுகின்றன.

பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளை தெற்காசியாவிலும் விஸ்தரிக்கும் வகையிலேயே இவ் இரண்டு இயக்கங்களின் பெயர்களை அமெரிக்கா பயங்கரவாதப் பட்டியலில் புதிதாக இணைத்துள்ளது.

இதன் மூலம் அவ் இயக்கங்களின் சொத்துக்கள் அமெரிக்காவில் முடக்கப்படவுள்ளன.

மேற்படி இரு இயக்கங்களும் பயங்கரவாத இயக்கங்கள என ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 19 ஆம் திகதிஅறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவற்றின் தலைவர்கள் உட்பட 20 சந்தேகநபர்களை பாகிஸ்தான் தம்மிடம் கையளிக்க வேண்டுமென இந்தியா கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-9)

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடயதரசு
குறள்

# வலம்புரி

## சமாதான முயற்சி தேவை

மூதூர், வழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே எழுந்துள்ள வன்முறைகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படுவது மிக மிக அவசியமாகும்.

சில தீயசக்திகளின் தூண்டுதலினால் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே எழுந்துள்ள வன்முறைச் சம்பவமானது தொடருமாயின் அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகள், சொத்தழிவுகள் இரு தரப்பினருக்குமிடையே நீங்காப் பகையை ஏற்படுத்தி விடும். அத்தகையதோர் துர்ப்பாக்கிய நிலை தோன்றுமாயின் அது தமிழ் - முஸ்லிம் தலைவர்களிடையேயும் பிளவை ஏற்படுத்திவிடும்.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் தமிழ்-முஸ்லிம் தலைவர்கள் மிக நெருக்கமாக - ஒற்றுமையாக இருப்பது உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடாகும். இத்தகையதோர் நிலைமையைக் கருத்தில் கொண்டே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களும் ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் தமிழ் - முஸ்லிம் மக்கள் சார்பான உடன்படிக்கை ஒன்றை உருவாக்கி இரு தலைவர்களும் அதனைக் கூட்டாக வெளியிட்டனர்

காலம்உணர்ந்துசெய்யப்பட்ட அவ்வுடன்படிக்கையானதுசமாதானப்பேச்சுவார்த்தையின் போது, முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதாக அமைந்துள்ளது.

இத்தகைய சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் போது மூதூர், வாழைச்சேனைப் பிரதேசங்களில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே வன்முறையைத்தூண்டி விட்டு சகோதரத்துவ உறவுடன் வாழும் இரு இனங்களுக்கிடையே கசப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு சாவுமணி அடிப்பது கட்டாய தேவையாகும். இதற்கு வசதியாகத் தமிழ் - முஸ்லிம் தலைவர்களடங்கிய சமாதானக்குழு அமைக்கப்படுவதும், அக்குழு பிரச்சினைகள் ஏற்படுகின்ற இடங்களுக்குநேரில்சென்று நிலைமையை ஆராய்ந்து சமாதான முயற்சியில் ஈடுபடுவதும் அவசியமாகும்.

இதேவேளை தமிழ் முஸ்லிம் கலவரம் என்ற குறுகிய பார்வையின்றி ஒற்றுமையை ஏற்படுத்த அரசும் கனதியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

# வரலாற்று உண்மைகளை எடுத்து விளக்குகின்ற 'பொறிக்கடவை அம்மன் தலபுராணம்' நூல்

## திறனாய்வுக் களம்

நூல்: ''அருள்மிகு பொறிக்கடவை அம்மன் தலபுராணம்''
ஆக்கம்: பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்
வெளியீடு: ஆலய அறங்காவலர் சபை
விலை: ரூ:100

உலகளாவிய ரீதியில் வரலாற்றுண்மைகள் அழிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் திரிபு படுத்தப்பட்டும் வரும் இன்றைய காலகட்டத்திலே, பண்டைத் தமிழருடைய வரலாற்றையும், வழிபாட்டு முறைகளையும் ஆவணப்படுத்துவதாகவும், நிகழ்காலத் தேவைக்கான ஓர் ஒழுங்கு படுத்தப் பட்ட வேண்டுதலாகவும் அமைகிறது பொறிக்கடவை அம்மன் தலபுராணம் என்னும்நூல். இதுதலபுராண வரைவிலக்கணததிற் கமைய, கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப்படலம், ஆற்றுப் படலம், நூற்பயன் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

தாம்வாழும்ஊர்சூழலோடு தம் வாழ்க்கையைக் கழித்துக் கொள்ளும் எம்மவர்களில் பெரும்பாலானவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு இடம் பெயர்வு, புதிய இடம், புதிய சூழலை அறிந்துகொள்வதற்கும், அவ்விடயங்களின் பூர்விக வரலாறுகளை ஆராய்வதற்கும் ஏதுவாயிற்று!. 'பிரச்சினைகள் தான் ஒருவருக்குப் பாடமாகின்றன'' ஆழ்ந்த தத்துவத்தை இந்நூல் வாயிலாக அறியமுடிகிறது. இங்கு நூலாசிரியர் ஆன்மிகத்தையும் அரசியலையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது என்பதையும் உணரவைக்கிறார். மதப்பற்றோடு, ஆனால் மத வெறியின்றி சமயத்தின் யதார்த்தத்தினை எடுத்தியம்புகிறார்.

''எந்தெந்த மதத்தாரும் ஏத்துமிறை மூர்த்தங்கள்'' என்று ஏகதெய்வக் கோட்பாட்டிற்கு வழிசமைப்பதாகவே அமைந்துள்ளது கடவுள் வாழ்த்து!

### வழிபடுமுறை

ஒருவன் தான் விரும்பியவாறு கடவுளை வணங்கவும், விரும்பிய வழிபாட்டு முறையைப் பின்பற்றவும் அவனுக்குச் சுதந்திரம் உண்டு. அதனடிப்படையிலே திராவிடர் வழிபாட்டுமுறையில்அமைந்த மரத்தின் கீழ் அமைந்த பீடத்திற்குப் பொங்கல்களைப் படைத்தும், பூசைகள் செய்தும்வழிபடும்முறையை, பாரம்பரியத்தை, இன்றும்பொறிக்கடவைக் கண்ணகி அம்மன் கோவில் பேணி நிற்பதை எண்ணி அகமகிழாமல்இருக்க முடியாது சிந்து வெளிக்கால, வேதகால வழிபாட்டு முறைகளின் பிரதிபலிப்பை வன்னி மண்ணில் இன்றுங் காணமுடிகிறது. கால நீரோட்டத்திலே வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும்

**ந. பவன் பீ.ஏ.**

அவற்றின் சாராம்சம் ஒன்றென்பதைஏககாலத்திலேயே உணர முடிகிறது.

ஆசிரியர் தான் நேரடியாகவே கண்டுகேட்டுணர்ந்த அம்சங்களையெல்லாம் யதார்த்தபூர்வமாக வடிப்பதிலே சேக்கிழாராகவே காணப்படுகிறார். நாட்டுப் படலத்திலே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலே, தமிழர் பரந்து வாழ்ந்த பிரதேசம் தான் பரந்தன் என்று அறைந்து சொல்கிறார். ஒரு தேசிய இனத்தின் வரலாற்றைப் பறைசாற்றுவதாகவே இப்புராணம்அமைந்துள்ளது. சமகால அரசியற் சிந்தனைகளின் தாக்கத்தை ஆசிரியரின் கவிதைகளிலே காணமுடிகிறது. திராவிடச் சான்றாதாரங்களில் ஒன்றான ஈமத்தாழிகள் (முதுமக்கள் தாழி) கண்டெடுக்கப்பட்ட பிரதேசப் பகுதியும் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

### பொறிக்கடவை

பணிக்கர்குலத்தினால் வசப்படுத்தப்பட்ட யானைகள் வன்னி மன்னரின் யானைப் படையை அதிகரித்திருக்கின்றன. இதைவிட, கொள்ளையர்களினாலும் யானைகள் பொறிவைத்துப் பிடிக்கப்பட்டு அவற்றின் தந்தங்கள் அபகரிக்கப்படுவதும் உண்டு. ஒருமுறை குஞ்சுப் பரந்தன் காட்டுப்பகுதியில் கொள்ளையர்கள் வைத்த பொறிக்கிடங்கிலே, யானை ஒன்றும் விழாமையால் காடெங்கும் அலைந்தனர். அவர்கள் அதிசயிக்கக் கூடியதாக ஆலயத்தை ஒத்தஒரு குடிசையிலே வயோதிபர் ஒருவர் உள்ளம்உருகி அன்னை பூசையிலே ஈடுபட்டிருந்ததைக் கண்ணுற்றனர், முதியவரை அதட்டினர். 'உன் இறைவி ஓர் உண்மைத் தெய்வமானால் நாமிட்ட பொறிக்கிடங்கிலே ஒரு கொம்பன் யானையை வீழ்த்த வேண்டும். அவ்வாறில்லையேல் 'உன்னைஅப்பொறிக்கிடங்கினுள் வீழ்த்தி மூடுவோம் என்று எச்சரித்துச் சென்றனர். சிலநாள் கழித்துவந்த ஆனை வேட்டையர்' அம்மன் உன்மை தான். ஆனைதந்தனள். அவள் பணிக்கு இதோ பொன்' என்றனர். அக்காணிக்கை கொண்டே அன்று அமைத்தசிறுகோவிலே பின்பு மெல்ல மெல்ல வளர்ந்து இன்று பொறிக்கடவை அம்மன் என்றபுதுப்பொலிவோடு திகழ்கிறது.

பொறிக்கிடங்குகள் வைத்து யானை பிடித்த தாற்றான் அக்குறிச்சி பொறிக்கடவை ஆயிற்று என்ற காரணத்தையும் அறிய முடிகிறது.

### வன்னி

1ம், 2ம், 6ம் பராக்கிரமபாகு போன்றவர்களது படையெடுப்புக்களால் வன்னி மக்கள் யாழ் குடாவுக்குஇடம் பெயர்ந்திருந்தனர். அக்காலத்தில் வன்னி நாடு ஒளியிழந்து காணப்பட்டது. மீண்டும் பண்டார வன்னியன் ஆட்சிக்காலத்தில் புதுப் பொலிவு பெற்றது.

நூலாசிரியர் தனது விநாயகர் காப்பிலே வலிகாமம் இணுவில் இறைபதிவாழ் செகராசசேகர விநாயகரை வேண்டுவதை,

'உண்ணெகிழ்ந்து பாட உதவி இனியேனும் எண்ணெண்ணைஈர்க்க இணுவில்''

என்றபாடல்மூலம் உணரலாம்.

திருமுருகாற்றுப் படை எழுந்த சூழலும் மனக்கண் முன்னேதோன்றுகிறது தமிழ் இவர்மனதில் முகாமிடுகிறது. நாவில் மந்திரமாகிறது. கரத்தில் காணப்படுகிறது.

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவைக்குறிச்சியின் அண்மைய உருத்திரபுரத்தில் சோழர்களால்ஸ்தாபிக்கப்பட்டசிவாலயம் இன்றும் திகழ்வதை

''குஞ்சுப் பரந்தன் பொறிக்
கடவையாம்
குறிச்சி அண்மைச் சோழர்
செஞ்சிவற்கு வைத்த
கோவில்
திகழ்வதின்றுங் காண்போம்'

என்ற அடிகள் தெளிவுபடுத்திநிற்கின்றன.

வன்னியில் உள்ள பூநகரி. மண்ணித்தலை, ஸ்கந்தபுரம், வட்டக்கச்சி போன்ற பல ஊர்கள் குறிப்பிடப்பட்டு, அங்குள்ள ஆலயச்சிதைவுகள் துருவி ஆராயப்படின்தமிழும் சைவமும் ஒருங்கே சிறக்கும் என்ற கருத்தும் இந்நூலில் முன்வைக்கப்படுகிறது. இதற்கும் மேலாக, பொறிக்கடவை அம்மன் ஆலயம் இருக்குஞ் சூழல் அகழ்வாராய்ச்சிக்குட்படின் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் அன்னை (அம்மன) வழிபாடு நிலவிய உண்மைவெளிப்பட்டு தமிழீத் தேசியஇனத்தின்தாயகம் பற்றிய உண்மை வெளிப்படும் என்று குறிப்பிடும் ஆசிரியர் இலங்கைத்தீவின் நிலையைக் '' காலங் காலமாய்க் கலகஞ் சண்டையால்கனலும் தீவிது...''

என்று ஒரேபார்வையில்நோக்குகிறார்.

வன்னி மூவாயிரம் சதுர மைல்எனக் குறிப்பிடும்அவர்,

'மன்னார் மேற்கெல்லை!
கிழக்கே திருமலை
தெற்கனு ராதபுரம்
யாழ்வடக்கெல்லை'

என அதன் எல்லைகளையும் குறிப்பிடுவது பொருத்தமாக அமைகிறது. புலவரின் எடுத்துக்கொண்ட கருத்தைத் தெளிவாகக் காட்டும் தன்மைக்கு.

'நிலம் வெடி கோடையோ
நெருப்பு'

என்ற அடி சிறந்ததோர் உதாரணமாகும்,

பொறிக்கடவைக் குறிச்சியின் இயற்கை எழிலை.

'தொட்டுவான் திரையில்
சுடர்நீலம் தீட்டும்
தூரிகைபோல் நிமிர்
பனைகள்'

என்று அழகான கற்பனையோடு கருத்துரைப்பது போற்றத் தக்கது. சீவக சிந்தாமணியின் கற்பனையையும் இது நினைவூட்டுகிறது.

### தலபுராணம்

ஒரு தலபுராணம் எவ்வாறெல்லாம் அமையவேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு இது! தமிழிலக்கியங் கற்கும் மாணவர்களும் சந்தி பிரித்தல், கொண்டு கூட்டல், பொருள் விளங்கல் போன்ற அம்சங்களை இலகுவில் இனங்கண்டு விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இப்புராணம் ஆக்கப்பட்டுள்ளது.

கோரக்கர் குடியிலேதோன்றிய அரசால் ஆக்கப்பட்ட கோரக்கர்குளம் பரந்தனிலே இன்றும் கண்ணகி அம்மன் அருளால் நிறைந்திருந்து பரந்தனைச் செழிப்பிக்கிறது.

பருவமழை பொய்த்த போது சொர்னகவி என்பார் 'மழைப்பாட்டு' பாடல்களைப்பாடி மழையை இறங்கச் செய்துள்ளார். நூலாசிரியரோ தான் வாழும்நாட்டிலே சமாதானச் சூழல் ஏற்பட வேண்டும் என்றநோக்கோடு இந்தத் தலபுராணத்தைப்பாடி அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

வரலாறுகளை மாற்ற முற்படும் பேரினவாத சக்திகளினது வரலாற்றை,

'நாட்டை விட்டு விரட்டப்
பட்டு
நாவாய் தம்மில் வந்த
கூட்டம் தீவின் தெற்கில்
குந்திக்
குழப்பம் இங்கு கிளரும்'

என்ற அடிகள் மூலம் நாசூக்காக எடுத்துரைப்பது அவரது இயல்பான தனித் நன்மை என்றேசொல்லலாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### வேட்கை

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்கும் தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே.

- திருமந்திரம்

கோவே, என் உள்ளத்தில் கொந்தளிப்பு உண்டாகாதிருக்கும் வண்ணம் கருணை புரிவாயாக.

காற்று வீசும் பொழுது தடாகத்தில் அலை கிளம்புகிறது. சேறு படிகிறது. காற்றில்லாத பொழுது அலை ஒடுங்குகிறது. சேற்று நீர் தெளிவடைகிறது. அலையும் சேறும் நிறைந்த தடாகம் போன்றது வேட்கை நிறைந்த உள்ளம். வேட்கை ஒளியுமளவு உள்ளம் தெளிகிறது. ஆத்ம சொரூபம் தென்படுகிறது. பிறகு தெளிந்த மனமே ஆத்ம சொரூபமாய் விடுகிறது.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## அரசு – புலிகள் பேச்சு ஆகஸ்டில் சாத்தியம்

# புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்கள்

# ஆகஸ்ட் 2 இற்கு முன்னர் அமுல்!

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட் 2ம் திகதிக்கு முன்னதாக முழுமையாக அமுல்படுத்தப்படுமென அரச உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னதாக படையினர் வெளியேறுவர் என்றும் படையினரின் இந்த வெளியேற்றத்தை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச தரப்புப் பிரதிநிதிகள் உறுதிப்படுத்துவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறாமல் இழுத்தடிப்புச் செய்து வந்தமை நேரடிப் பேச்சுவார்த்தைக்கு பாரியதடைக்கல்லாக அமைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த நிலையில் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னதாக பொது இடங்களில் இருந்து படையினர் முற்றாக வெளியேறி விடுவர் என அரச உயர் வட்டாரங்கள் உறுதிப்படுத்தி உள்ளமையால் ஓகஸ்ட் மாதம் அளவில் நேரடிப்பேச்சு வார்த்தை இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## தேசிய இயக்கம் குறித்து

## இந்திய மாக்சிசக் கட்சியுடன் ஜே.வி.பி ஒப்பந்தம் செய்தது

(கொழும்பு)

இந்தியாவின் போவேட் புளொக் (Forward Block) என்னும் அகில இந்திய மாக்சிசக் கட்சியுடன் ஜே.வி.பி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. நுகேகொடையிலுள்ள ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் ஜே.வி.பியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும், போவேட் புளொக் சார்பில் அதன் பொதுச்செயலாளர் டீ.பிஸ்வாசும் நேற்று முன்தினம் ஒப்பமிட்டுள்ளனர். மூலதனத்தை உலகமயமாக்குதல், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம். தேசிய இயக்கங்களை இரு நாடுகளிலும் ஏற்பாடு செய்தல் ஆகியவை உட்பட 16விடயங்கள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் உடன்படிக்கையின் போது ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர் நந்தன குணதில, போவேட் புளொக் சார்பில் அதன் சர்வதேச பிரிவின் செயலாளர் என்.தேவராஜன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். போவேட் புளொக் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## வவுனியாவில் இருந்து 35 அகதிகள் யாழ் வந்து சேர்ந்தனர்

(யாழ்பபாணம்)

வவுனியாவில் இருந்து சுமார் 35அகதிகள் நேற்று பஸ்வண்டி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் யாவரும் யுத்த சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாமில் தங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர்களை யாழ் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் வரவேற்று அவர்களின் சொந்த இடங்களிற்கு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இவர்கள் அனைவரும் நீர்வேலி, கட்டுவன், தெல்லிப்பழை, குப்பிளான், கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களை சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (வ)

### நெதர்லாந்து...

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை சந்தித்து சுமார் ஒன்றரைமணி நேரம் பேசி உள்ளனர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றி இரு தரப்பினரும் பரஸ்பரம் கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின் வவுனியா அரச அதிபர் கே.கணேஷைச் சந்தித்து இடம் பெயர்ந்த மக்கள் பிரச்சினைகள், மீள் குடியேற்றம் தொடர்பாக பேசிவிட்டு கொழும்பு திரும்பியுள்ளனர். (வ)

### தொழுகையில்...

இடம்பெற்ற பிறிதொரு கைக் குண்டு வீச்சுச் சம்பவத்தில் இரண்டு பொது மக்கள் காயமடைந்து வாழைச் சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக தொடரும் இந்த வன்முறைகளில் ஆறுபேர் உயிரிழந்துள்ளதாகவும் 60க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றையும் மீறி இந்த வன்முறைச் சம்பவங்கள்தொடர்ந்தவண்ணமுள்ளன (உ)

## இன்று தேர்

திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை 9மணிக்கு நடைபெறும்.

### புலிகளின்...

துறையைச் சேர்ந்த புலித்தேவன், ஈழமாறன், ஜோர்ஜ் ஆகியோரும்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் அதன் தலைவர் ரொண்ட் பியூறு ஹெவ்டேயுடன் கண்காணிப்புக்குழுவின் கிளிநொச்சி அலுவலகத்தில் புதிதாக கடமை ஏற்றுள்ள ஹண்ஸ், கண்காணிப்புக் குழுவின் முதன்மை அதிகாரி போல்எரிக் செய்தித் தொடர்பு அலுவலர் றீட்டர் ஹெரிக்கெல்சன், மற்றும் பீட்டர் நோர்லைன்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(வ)

### வேலணைத்...

இன்று வாக்கு மூலம் பெறப்படவுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க விரும்பும் பொது மக்களை விசாரணைகள் இடம் பெறும் இடத்திற்கு சமூகமளிக்குமாறு அரச தரப்பில் விசாரணையை மேற்கொண்டுள்ள கடற்படை அதிகாரி அட்மிரல் தர்மப்பிரிய, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சவங்கம ஆகியோர் கேட்டுள்ளனர்.(உ.த.43.23)

## மட்டக்களப்பில் இன்று ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மூதூர் பகுதியிலும், மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியிலும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து இன்று மட்டக்களப்பில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று மட்டக்களப்பில் வாகனப் போக்குவரத்துக்கள் எதுவும் நடைபெறாததால் பாடசாலைகளில் மாணவர்கள் வரவு குன்றிக் காணப்பட்டது.

மட்டக்களப்பில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தது. (ம)

## தென்னிலங்கை ஆசிரியர் - மாணவர் சமாதானப் பேரணி யாழ். வரும்

(கொழும்பு)

காலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் சமாதானப் பேரணி ஒன்று யூலை மாதம் 2ம் திகதி புறப்பட்டு 5ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

சுமார் நானூறு ஆசிரியர்கள் மாணவர்கள் அடங்கிய இப் பேரணி காலியிலிருந்து 2ம் திகதி புறப்பட்டு களனியைச் சென்றடைந்து அங்குள்ள ஒரு தொகுதி மாணவர்களையும் சேர்த்துக் கொண்டு கண்டிக்கு சென்று அங்கும் ஒரு தொகுதி மாணவர் களை இணைத்துக் கொண்டு வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இப பேரணியினர் சுமார் 3 தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர்.

இம் மாணவர்கள் பேரணியை அடுத்து கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு பாடசாலைக்கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ, பொதுநிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய இச் சமாதான பேரணியினர் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கும் விஜயம் செய்யவுள்ளதுடன் 6ம் திகதி சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் கலாசார நிகழ்ச்சி ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

ஏ-9 கண்டி வீதி வழியாக வரும் வேளை வவுனியா, கிளிநொச்சி, சாவகச்சேரி பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்கவுள்ளனர். (வ)

## ஏ - 9 பாதை மதகுருமாருக்கு பயண முன்னுரிமை

(திருநெல்வேலி)

ஏ-9 பாதையூடாக போக்குவரத்திலீடுபடும் சகல மதங்களையும் சேர்ந்த மதகுருமார்களுக்கு முகமாலை சோதனைச் சாவடியில் இடம்பெறும் சோதனைகள் இலகு படுத்தப்படவுள்ளதாக முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் அஜித்குமார தெரிவித்தார்.

வாகனங்களில் வரும் மதகுருமாரகள் சோதனை நடவடிக்கைகள் முடிவடைந்ததும் தமது பயணத்தை ஆரம்பிக்க முடியும் என்றும் வரிசையில் நின்று பதிவு செய்ய வேண்டிய தேவை இன்று முதல் நீக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-43)

## கிழக்கில் வன்முறை

## உயர்மட்டப் பாதுகாப்பு மாநாடு பிரதமர் தலைமையில் கூடியது

(கொழும்பு)

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் கலவரங்கள் மோசமாக காணப்பட்டதை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் இரவு பாதுகாப்பு உயர்மட்ட மாநாடு ஒன்றைக் கூட்டியுள்ளார்.

இம் மாநாட்டில் முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், முஸ்லீம் அமைச்சர்கள், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ஹக்கீம் பிரதமரோடு தொடர்பு கொண்டு நிலைமை மோசமடைந்து வருவதை எடுத்துக் கூறியதை அடுத்தே இம் மாநாடு கூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இம் மாநாட்டில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது (ந.5)

## பல்கலைக்கழகத்திற்கு தெரிவான

## மத்திய கல்லூரி மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கடந்த வருடத்தைப் போல் இவ் வருடமும் ஐரேப்பிய நாடுகளின் பழைய மாணவர் சங்கத்தில் இணைந்த புலமைப்பரிசில் திட்டத்தை அமுல் படுத்தவுள்ளது.

2001 ஆகஸ்ரில் க.பொ.த உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களிற்கு இப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

வருடாந்த குடும்ப வருமானம் ரூபா 9ஆயிரத்துக்கு மேற்படாதவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

பொற்றோரை இழந்தவர்களும், ஊனமுற்றவர்களும், விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமையாக செயற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரியின் பிரதி அதிபர் கே.சுந்தரலிங்கத்திடம் பெற்று அடுத்த மாதம் 5ம் திகதிக்கு முன்னர் அவரிடம் கையளிக்குமாறு கல்லூரியின் அதிபர் க.இராசதுரை கேட்டுள்ளார். (ந)

செம்பியின் செல்வி மலர் சின்னையா
அவர்களால் எழுதப்பட்ட
மழலை எழுச்சிப் பாடல்களின்
ஒலி நாடா வெளியீட்டு விழா
அழைப்பிதழ்

காலம் :- 29.06.2002 இன்று (சனிக்கிழமை)
நேரம் :- மாலை 3.00 மணி
இடம் :- நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
தலைவர் :- கலாநிதி S.சிவலிங்கராசா அவர்கள்
[தலைவர் தமிழ்த்துறை – யாழ்.பல்கலைக்கழகம]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர் சின்னையா,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

இசைக்குழுவினர்,
"மழலை எழுச்சி"

அனுசரணை:- யசோ ஆட்ஸ் பிளாஸ்ரிக்
இல. 35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். [5613]

ஜோ
பெயர் பொறிக்கப்பட்டு
எல்லாக் கடைகளிலும்
விற்பனைக்குத் தயார்
(C/4545)

லாலா சோப்
எமது தயாரிப்பு
சன்சயின் சோப்
கடைகளில் தற்பொழுது
விற்கும் விலை
13 ரூபா மட்டுமே
[4544]


எம்.டி.குணசேன
மாபெரும் புத்தகக் கண்காட்சி விற்பனை
[யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில்]
ஜூலை 03 முதல் 06ம் திகதி வரைகாலை 10 முதல் மாலை 6 வரை மருத்துவம், அறிவியல், கல்வி இயல், பொருளியல், தொடர்பு, தொழில் நுட்ப, கணனி இயல், இலக்கியம் என்று பல துறைகளில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை உள்ள நூல்கள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தும் கிடைக்கும்.
அனைவரும் வருக!
[C/4543]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.